# விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு

# வெற்றிடங்கள்

## ஊக்கப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மை

ஊக்கப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மையின் வெற்றிடங்கள் உள்ள கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்காக இலங்கை சனநாயக சோஷலிச குடியரசின் பிரசைகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### நிர்வாக அதிகாரி
### (வெற்றிடம் 01)

**(1) வேலை விபரம்**

ஊக்கப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மையின் நிர்வாக செயற்பாடுகள், அலுவலக கட்டிட பராமரிப்பு, பயன்பாட்டு சேவைகள் மற்றும் நிர்வாக செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த அறிக்கை தயாரித்தல், நிறுவனத்திடம் உள்ள வாகனங்கள் தொடர்பில் மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவத்தினால் வழங்கப்படும் மற்ற நிர்வாக மற்றும் மனித வள முகாமைத்துவ பணிகளை மேற்கொள்ளல்.

**(2) தகைமை மற்றும் அனுபவம்**

2.1 நிர்வாக அதிகாரி பதவிக்காக வெளிவாரி விண்ணப்பதாரர்களை நியமித்தல்

**(அ) கல்வித் தகைமை**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட மனித வள முகாமைத்துவம்/ வர்த்தக/ வர்த்தக நிர்வாகம்/ அரச நிர்வாகம் தொடர்பில் முதல் பட்டத்தை பெற்றிருத்தல் அல்லது பதவிக்குத் தொடர்புடைய துறையில் வேறு பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்.

2.2 நிர்வாக அதிகாரி பதவிக்காக உள்ள விண்ணப்பதாரர்களை நியமித்தல் (கீழுள்ள 1 அல்லது 2)

1. மேல் குறிப்பிடப்பட்டுள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்.
2. முகாமைத்துவ உதவி – தொழில்நுட்பம் அல்லாதது (MA 1-1) சேவை நிலையின் 8ஆவது தரத்தின் பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**(3) சம்பள அயவு**

JM 1-1 2025 (ரூபா 72,650-10x1,360-18x2040 – 122,970)
(முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இலக்கம்: 01/2025 இற்கு அமைய)

**(4) வயது**

22 வயதுக்குக் குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.

**(5) ஆட்சேர்ப்பு முறை**

நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படும் வகையில் பகிரங்க அறிவித்தல் அல்லது பத்திரிகை அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின் எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும்/ அல்லது நியமனக் குழுவினால் நியமிக்கப்படும் குழு ஒன்றினால் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை முடிவின் அடிப்படையில் தேர்வு செய்தல் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

### தகவல் தொழில்நுட்ப அதிகாரி
### (வெற்றிடம் 01)

**(1) வேலை விபரம்**

ஊக்கப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மையின் தகவல் தொழில்நுட்பம் சார்ந்த தரநிலை நடவடிக்கைகள் சார்ந்த ஆவணப்படுத்தல், கணினி Word Processors, Spreadsheets தயாரித்தல், பயன்படுத்தல், தரவு அமைப்பு உருவாக்கம் மற்றும் பயன்பாடு, இணையதளம் மற்றும் மின்னஞ்சல் பயன்பாடு தொடர்பிலான பணிகள் சிரேஷ்ட முகாமையாளரினால் அமர்த்தப்படும் மற்ற தொழில்நுட்ப பணிகள்

**(2) தகைமை மற்றும் அனுபவம்**

2.1 வெளிவாரி விண்ணப்பதாரர்

**(அ) கல்வித் தகைமை மற்றும் அனுபவம் (கீழுள்ள தகைமை 1 அல்லது 2 அல்லது 3 அல்லது 4)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தகவல் தொழில்நுட்பம் / கணினி விஞ்ஞான ஆரம்ப பட்டத்தை பெற்றிருத்தல் அல்லது பதவிக்குத் தொடர்புடைய விடயப் பரப்பில் வேறு பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்.
2. மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றினால் தகவல் தொழில்நுட்பம்/ கணினி விஞ்ஞானத்திற்காக வழங்கப்படும் தேசிய தொழில் தகைமை (NVQ) ஏழாவது (07) தரத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ்
3. மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றினால் தகவல் தொழில்நுட்பம்/ கணினி விஞ்ஞானத்திற்காக வழங்கப்படும் தேசிய தொழில் தகைமை (NVQ) ஆறாவது (06) தரத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ்

   மற்றும்

   தகைமையை பெற்ற பின்னர் அரச, அரச கூட்டுத்தாபன, சபை, சட்டரீதியான நிறுவனம் ஒன்றில் குறைந்தது குறித்த துறையில் ஐந்து (05) ஆண்டுகள் அனுபவத்தைப் பெற்றிருத்தல்
4. மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப/ தொழில் பயிற்சி நிறுவனம் ஒன்றினால் தகவல் தொழில்நுட்பம்/ கணினி விஞ்ஞானத்திற்காக வழங்கப்படும் தேசிய தொழில் தகைமை (NVQ) ஐந்து (05) தரத்திற்கு குறையாத தேர்ச்சி சான்றிதழ்

   மற்றும்

   தகைமையை பெற்ற பின்னர் அரச, அரச கூட்டுத்தாபன, சபை, சட்டரீதியான நிறுவனம் ஒன்றில் குறைந்தது குறித்த துறையில் பத்து (10) ஆண்டுகள் அனுபவத்தைப் பெற்றிருத்தல்

2.2 உள்ளக விண்ணப்பதாரர்கள்

மேல் குறிப்பிடப்பட்டுள்ள வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்கான தகைமைகளை பூர்த்தி செய்திருத்தல்.

**(6) சம்பள அயவு**

JM 1-1 2025 (ரூபா 72,650-10x1,360-18x2040 – 122,970)
(முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இலக்கம்: 01/2025 இற்கு அமைய)

**(7) வயது**

22 வயதுக்குக் குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.

**(8) ஆட்சேர்ப்பு முறை**

நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படும் வகையில் பகிரங்க அறிவித்தல் அல்லது பத்திரிகை அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின் எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும்/ அல்லது நியமனக் குழுவினால் நியமிக்கப்படும் குழு ஒன்றினால் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை முடிவின் அடிப்படையில் தேர்வு செய்தல் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

### அபிவிருத்தி உத்தியோகத்தர்
### (வெற்றிடம் 03)

**(1) வேலை விபரம்**

ஊக்கப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மையினால் எடுக்கப்படும் முடிவுகளை செயற்படுத்துவதற்கு பங்களிப்புச் செய்தல், மேலுள்ள பதவி சார்ந்த கடமைகளை நிறைவேற்றல், அன்றாட நிர்வாக பணிகளை முன்னெடுப்பதற்கு நிர்வாகத்திற்கு உதவுதல் மற்றும் பணிப்பாளர் நாயகத்தினால் அமர்த்தப்படும் வேறு கடமைகள்.

**(2) தகைமை மற்றும் அனுபவம்**

(அ) கல்வித் தகைமை

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட முகாமைத்துவம், வணிகம், புள்ளிவிபரவியல், சமூக விஞ்ஞானம், பொருளாதார விஞ்ஞானம், கல்வியியல், தகவல் தொழில்நுட்பம், விளையாட்டு விஞ்ஞானம் மற்றும் முகாமைத்துவம் தொடர்பில் முதல் பட்டத்தை பெற்றிருத்தல் அல்லது பதவிக்குத் தொடர்புடைய துறையில் பட்டம் ஒன்றை பெற்றிருத்தல் அல்லது குறித்த துறையில் வேறு பட்டம் ஒன்றை பெற்றிருத்தல்.

**(3) சம்பள அளவு**

MA 3 - 2025 ரூபா (53,940-10x800-11x1,190 – 10x1,320-5x1,350 – 94,980)
(முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இலக்கம்: 01/2025 இற்கு அமைய)

**(4) வயது**

22 வயதுக்குக் குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.

**(5) ஆட்சேர்ப்பு முறை**

நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படும் வகையில் பகிரங்க அறிவித்தல் அல்லது பத்திரிகை அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின் எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும்/ அல்லது நியமனக் குழுவினால் நியமிக்கப்படும் குழு ஒன்றினால் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை முடிவின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

### முகாமைத்துவ உதவியாளர்
### (வெற்றிடம் 02)

**(1) வேலை விபரம்**

மேலுள்ள பதவிக்கு தொடர்புடைய கடமைகளை மேற்கொள்வதற்கு, அன்றாட நிர்வாக செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு உதவுதல் மற்றும் பணிப்பாளர் நாயகத்தினால் அமர்த்தப்படும் வேறு விசேட கடமைகளை மேற்கொள்ளல்.

**(2) தகைமை மற்றும் அனுபவம்**

கல்வித் தகைமை

2.1 வெளிவாரி விண்ணப்பதாரர்கள்

**(அ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில்**

I. சிங்களம்/ தமிழ்
II. கணிதம்
III. ஆங்கில மொழி

ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பரீட்சையில் குறைந்தது மூன்று பாடங்களில் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர) சித்தி பெற்றிருத்தல்.

(இ) பதவிக்கு விசேடமான வேறு தகைமைகள்:

கணினி Word Processors/ தட்டச்சு தொடர்பில் மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆறு (06) மாத கற்கை ஒன்றை கற்றிருத்தல் அல்லது வேறு அதற்கு இணையான மட்டத்தில் தேர்ச்சியை பூர்த்தி செய்திருத்தல்.

**2.2 உள்ள விண்ணப்பதாரர்கள்**

(அ) ஆரம்ப தரம் - தேர்ச்சி அல்லாத மற்றும் தேர்ச்சி சேவை நிலைகளில் கீழுள்ள "ஆ", "இ" மற்றும் "ஈ" இல் குறிப்பிடப்பட்ட தகைமை உள்ள ஊழியர்களுக்கு இதற்காக விண்ணப்பிக்க முடியும்.

(ஆ) கல்விப் பொதுத் தராதர (சாதாரண தர) பரீட்சையில்

I. சிங்களம்/ தமிழ்
II. கணிதம்
III. ஆங்கில மொழி

ஆகிய பாடங்கள் உட்பட நான்கு (04) பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

(இ) வேறு தகைமைகள்:

கணினி Word Processors/ தட்டச்சு தொடர்பில் மூன்றாம் நிலைக்கல்வி தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆறு (06) மாத கற்கை ஒன்றை கற்றிருத்தல் அல்லது வேறு அதற்கு இணையான மட்டத்தில் தேர்ச்சியை பூர்த்தி செய்திருத்தல்.

(ஈ) பணியில் நியமனத்தை பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு அந்த நியமனங்கள் நிரந்தரமாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஒ) குறித்த தினத்திற்கு முன்னதாக நிரந்தர நியமனம் பெற்றவர்களில் ஐந்து (05) ஆண்டுகள் தொடர்ச்சியாக திருப்திகரமான பணிக்காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். .

**(6) சம்பள அளவு**

MA 1 – 1 2025 ரூபா (46,220-10x540-7x630-4x890-20x1,190-80,390)
(முகாமைத்துவ சேவை சுற்றுநிருப இலக்கம்: 01/2025 இற்கு அமைய)

**(7) வயது**

18 வயதுக்குக் குறையாத மற்றும் 45 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு உச்ச வயதெல்லை பொருந்தாது.

**(8) ஆட்சேர்ப்பு முறை**

நிறுவனத்தின் பணிப்பாளர் சபையினால் தீர்மானிக்கப்படும் வகையில் பகிரங்க அறிவித்தல் அல்லது பத்திரிகை அறிவித்தல் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்ட பின் எழுத்துமூல போட்டிப் பரீட்சை மற்றும்/ அல்லது நியமனக் குழுவினால் நியமிக்கப்படும் குழு ஒன்றினால் நடத்தப்படும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை முடிவின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளப்படும்.

**மேலுள்ள பதவிகளுக்கான பொது நிபந்தனை**

- சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பி க்கை நிதியம் (அபேட்சகர் மூலம் 8% மற்றும் நிறுவனத்தின் மூலம் 12% சேமலாப நிதியத்திற்காகவும் 3% ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்காகவும் பங்களிப்புச் செய்யப்படும்)
- கல்வி, தொழில் தகைமை மற்றும் அனுபவத்திற்கு அமைய தேர்வு செய்யப்படும் விண்ணப்பங்கள், நேர்முகப்பரீட்சைக்காக அழைக்கப்படும்.

**விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் முறை**

- விண்ணப்பதாரர் மூலம் சான்றிதழ், நன்னடத்தை சான்றிதழ்களின் பிரதிகள், உறவினரல்லாத பரிந்துரையாளர்கள் இருவரின் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கத்துடன் தமது சுயவிபரக் கோவையை 2025.02.04 ஆம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு பணிப்பாளர் நாயகம், இலங்கை ஊக்கமருந்து தடுப்பு முகவர் நிறுவனம், 363/12, சுகததாச அரங்கு - பிளொக் டி, விளையாட்டு வளாக வாகனத் தரிப்பிட வீதி, சிறிமாவோ பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு 14 என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.
- அரச திணைக்களங்கள்/ கூட்டுத்தாபனம்/ சட்டரீதியான சபைகளில் பணியாற்றுபவர்கள் தமது விண்ணப்பங்களை அவர்களின் நிறுவன தலைவர்கள் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும்.
- விண்ணப்பப்படிவங்கள் இடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கின்ற பதவியை குறிப்பிடுதல் வேண்டும்.
- அவ்வாறு இல்லாத மற்றும் விண்ணப்பங்கள் ஏற்கப்படும் திகதிக்கு பின்னர் அனுப்பப்படுகின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
- இது தொடர்பில் செல்வாக்கு செலுத்துவது தகுதியின்மையாக அமையும்.

**பணிப்பாளர் நாயகம்**
**ஊக்கப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான இலங்கை முகவராண்மை.**
**011-2328366**